**அனுராதபுரம் மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அனுராதபுரம் மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுராதபுரம் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் 1.6.3 அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் குறைந்து செல்லும் மீதி முறைமையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதாக கொள்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அலுவலக உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்த எதிர்பார்த்த பயனுள்ள ஆயுட்காலத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு சதவீதம் சரியாக இருக்கவில்லை. | மீள் மதிப்பீட்டு பிரகாரம் பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட்:டுள்ளது. | சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீதிமன்றத்திலிருந்து கிடைத்த வருமான விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 373,664 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது 264,917 என ரூபா 108,747 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் நீதிமன்ற தண்டப்பண வருமானக் கணக்கு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன் | நீதிமன்றத்திலிருந்து கிடைத்த உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் நீதிமன்ற தண்டப்பண வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அரச வங்கியொன்றில் நிலையான வைப்பிற்காக மீளாய்வாண்டிற்காக பெறவேண்டிய ரூபா 183,370 ஆன வைப்புக்கள் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் நிலையான வைப்புக் கூற்றில் குறிப்பிடப்பட்ட வட்டித் தொகை 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தவறாக குறிப்பிடப் பட்டுள்ளமையால் இந் நிலையான வைப்பிற்காக கிடைத்த வட்டித் தொகை கணக்கிடப்படவில்லை. | சரியான கணக்கு காலப்பகுதிக்குரிய நிலையான வைப்பு வட்டி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிர்மாண இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதால் கிடைத்த வருமானம் ரூபா 5,205,250 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 5,921,492 என ரூபா 716,242 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்கின்றேன். | சரியான வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | அட்டவணையின் பிரகாரம் மீளாய்வாண்டில் அரச சேவை சேமலாப நிதியத்தின் பங்களிப்புச் செலவினம் ரூபா 4,633,572 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 4,652,844 என ரூபா 19,272 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்கின்றேன். | சரியான செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் அமைய ஊழியர் சம்பளச் செலவினம் ரூபா 1,282,439 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த கணக்காண்டின் போது சம்பளத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு காலப்பகுதிக்குரிய சரியான செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் திரண்ட நிதியம் ரூபா 16,947,339 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறித்த சீராக்கங்கள் அடுத்த கணக்காண்டின் போது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பேன். | மீளாய்வாண்டிற்குரியதாக முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மாநகர சபை மூலம் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 15 செயற்திட்டங்களுக்குரிய மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் வழங்குனர் கடன்கொடுத்தோர் ரூபா 4,150,491 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இத்தவறை அடுத்த கணக்காண்டின் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | சரியான கடன்கொடுத்தோர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஏ) | மாநகர சபைக்குச் சொந்தமான ரூபா 121,000,000 பெறுமதியாக இனங்காணப்பட்டிருந்த 02 கட்டிடங்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 6,050,000 பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்படாமை காரணமாக ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தினால் குறைவாக இருந்தது. | அடுத்த கணக்காண்டின் போது பெறுமானத்தேய்வு பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | சரியான நிலையான சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டது அதற்காக பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மாநகர சபை நிதியத்தால் செயற்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்குரிய கடன் மீதி ரூபா 12,586,108 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதக்கூற்றுக்களில் அது ரூபா 14,193,304 என கணக்கீடு செய்யப்பட்டமையால் கடன்கொடுத்தோர் ரூபா 1,607,196 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 14,193,303 ஆன கடன் கொடுத்தோர் மீதியொன்று உள்ளது. | சரியான கடன்கொடுத்தோர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பயன்பாட்டு பதிவேடுகளில் காட்டப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 4,025,861 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்கு மீதிகள் மற்றும் அட்டவணை மீதி சரியாக சமர்ப்பிக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | | |
| | xix ஆம் அத்தியாயத்தின் 5.3.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | பட்டியல்படுத்தப்பட்ட அரச வீடொன்றில் குடியிருக்கும் போது விவாகமான உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளத்தில் பத்து சதவீதம் (10%) அறவிடப்பட வேண்டிய போதிலும் முன்னால் மாநகர ஆணையாளரிடமிருந்து 2009 நவம்பர் முதல் 2016 யூன் வரை ரூபா 201,017 மற்றும் 2020 சனவரி 01 அந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 99,662 ஆன வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அங்கீகாரமின்றி | 2009 ஒக்தோபர் 13 ஆந் திகதி நடைபெற்ற பொது சபை தீர்மானத்தின் 44 ஆம் இலக்க முன்மொழிவு இலக்கம் 05(48) இன் கீழ் மாநகர ஆணையாளருக்கு வாடகை கொடுப்பனவு இல்லாமல் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருப்பதற்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது. | தாபன விதிக்கோவை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | காலப்பகுதிக்கு தண்ட வாடகை ரூபா 273,949 தொகையும் அறவிடப் பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த உத்தியோகத்தர் தொடர்பாக 1969 இன் 07 ஆம் அரச வீட்டில் (உரித்தினை மீளப் பெற்றுக் கொள்ளல்) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | |

**2. நிதி மீளாய்வு**

-------------------

**2.1 நிதி விளைவுகள்**

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 46,960,582 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 47,891,094ஆக இருந்தது.

**2.2 நிதிக்கட்டுப்பாடு**

----------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைபயின் பெயரில் அரச வங்கியொன்றில் பேணிச் செல்லப்படும் நிலையான வைப்பினை பிணையாக வைத்து விரைவில் தீர்வுசெய்யும் அடிப்படையில் 2019 ஏப்ரல் மாதம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 14,400,000 ஆன கடன்தொகையில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் தவணையாக ரூபா 3,203,854 தொகையும் வட்டியாக ரூபா 2,178,018 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 11,196,146 தொகை செலுத்த வேண்டியதாக இருந்தது. | வருடக்கணக்காக வருமானம் இழக்கப்பட்டமை காரணமாக உருவாகிய நிதிச் சிக்கல்கள் காரணமாக இக்கடன் தொகையை தீர்வு செய்வதற்கு முடியாமயால் சாதாரண கடன் தொகையாக பேணிச் செல்லப்படுகின்றது. | நிலையான வைப்பினை பிணையாக வைத்து பெற்றுக்கொண்ட கடன்தொகையை விரைவில் தீர்வு செய்ய வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி மற்றும் வரி** | | |
| | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 96,822,402 ஆன நிலுவை வீத வரியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வீதவரி சேகரிக்கும் சதவீதத்தை அதிகரப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | வீதவரி நிலுவை வருடாந்தம் அதிகரித்துள்ளதால் நிலுவையை அறவிடுவதற்கு விரைவில் செயற்பட வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 45,698,842 ஆன நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை அறவிடுவதற்காக முறைப்படி கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் கடை உரிமையாளர்களின் வேண்டுகோளுக்காக மாநகர சபை தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | **அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் வியாபார அனுமதிப்பத்திர கட்டணங்களின் பற்றாக்குறை ரூபா 5,238,635 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் மீளாய்வாண்டின் போது வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண கடன்பட்டோர் ரூபா | இரட்டிப்பு தவறு மற்றும் வியாபாரங்கள் மூடப்பட்டமை காரணமாக இக்கடன்பட்டோர் மீதிகள் | கடன்பட்டோரை பதிவழிப்பதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 3,906,584 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது | பதிவழிக்கப்பட்டிருந்தன. | |

(ஈ) **முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அன்று அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா. 42,390,277 ஆக இருந்த போதும் அப்பணத்தை பெற்றுக் கொள்வதற்காக போதியளவு மேற்பார்வையொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்க நடவடிக்கை எடுப்பேன். | பெறவேண்டிய முத்திரைக் கட்ணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1. முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரிக்குளம் பிளிசரு செயற்திட்டம் தொடர்பாக பயன்படுத்தப்பட்டிருந்த எக்ஸ்கவேட்டர் இயந்திரம் 2014 செப்தெம்பர் 18 ஆம் திகதி தீப்பற்றியமை தொடர்பாக இடம்பெற்ற ஆரம்ப விசாரணையில் இனங்காணப்பட்ட ரூபா 3.3 மில்லியன் நட்டத்தில் நான்கில் ஒரு பகுதி பெறுமதியான ரூபா. 825,000 பொறுப்பான உத்தியோ கத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென அவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தினால் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஒழுக்காற்று கட்டளை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். | குறித்த ஒழுக்காற்று கட்டளைகளை விரைவில் பெற்று பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந் து பணத்தை அறவிடுவதற்குநடவடிக் கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2012 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மாநகர சபையில் இடம் பெற்றிருந்த இரு நிதி முறைகேடுகளில் சபை நிதியத்திற்கு ரூபா 47,174,493 என மதிப்பிடப்பட்ட நிதி இழப்பை மீட்க சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை. | வீதவரி முறைகேடு தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட ஒழுக்காற்று பரிசோதனையின் பிரகாரம் குற்றவாளியாக்கப்பட்டிருந்த தரப்பினரிடமிருந்து ரூபா 6,322,302 தொகை அறவிடுவதற்கு ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டிருந்த போதும் அதற்காக மேன்முறையீடு செய்துள்ளனர். சம்பள மோசடிக்காக ஒழுக்காற்று பரிசோதனையொன்று நடாத்தப்பட்டுள்ளது. | வீதவரி மோசடிக்காக முறையான ஒழுக்காற்று பரிசோதனையின் பிரகாரம் குறித்த அறவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சம்பள மோசடிக்காக ஒழுக்காற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மாநகர சபையில் சேவை புரிந்து 2013 ஆம் ஆண்டின் போது வேறு நிறுவன மொன்றுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றிருந்த ஊழியர் ஒருவருக்கு இடமாற்றம் செய்யப்பட்டு சென்ற திகதியில் இருந்து 2018 யூன் மாதம் வரையான காலப்பகுதிக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,816,557 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நிதிசார் நட்டத்தை தீர்வு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஆரம்ப புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு பணத்தை அறவிடுவதற்காக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இப் பணத்தை அறவிடுவதற்காக விரைவில் செயற்பட வேண்டும். |
| (ஈ) | மாநகர சபையின் சேவை புரிந்து வேலை இடை நிறுத்தப்பட்டிருந்த 15 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 699,227 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேலை இடை நிறுத்தத்திற்கு உட்பட்ட ஊழியர்களுக்கான ஆரம்ப விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அப் புலனாய்வு செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் அறவீடுகள் மேற்கொள்ளப்படும். | இத் தொகையை அறவீடு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கில் உள்ளடக்கப்பட்ட இனங்காணப்படாத ரூபா | இக்கடன்பட்டோர் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 399,328 பெறவேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எடுப்பேன் | |
| (ஊ) | 2014 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கொடுப்பனவு செய்யப்படாத கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 2,930,450 கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபையில் உருவாகியுள்ள நிதி சிக்கல் காரணமாக சபை தீர்மானத்தின் பிரகாரம் மாதத்தில் ரூபா 100,000 வீதம் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வுக் கட்டணங்கள் தாமதமின்றி கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 **செயற்பாட்டு செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாநகர சபைக்கு சொந்தமான வாரச் சந்தைக்காக 2020 யூன் 06 ஆந் திகதி முதல் செலுத்த வேண்டிய ரூபா 928,442 ஆன குத்தகை தொகை மற்றும் ரூபா 188,030 ஆன மின்சாரப் பட்டியல் கொடுப்பனவு செய்யப்படாமை தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை களுக்காக சட்ட பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | குறித்த நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |